மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சட்டக்கல்லூரி களில் 1977–78 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட சமூகத்தின ருக்கு 167 இடங்களும், பின்தங்கிய சமூகத்தினருக்கு 573 இடங்களும் மற்ற சமூகத்தினருக்கு 520 இடங்களும் கொடுக் கப்பட்டுள்ளன.

பொறியியல் கல்லூரியில் முற்பட்ட வகுப்பினருக்கு 377 இடங்களும், பிற்பட்ட வகுப்பினருக்கு 707 இடங்க ளும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மலைசாதியினருக்கு 244 இடங்களும் கொடுக்கப்பட்டுள்ளன,

தொழில் நுணுக்கக்கல்லூரியில் முற்பட்ட வகுப்பின ருக்கு 1,463 இடங்களும், பிற்பட்ட வகுப்பினருக்கு 3,063 இடங்களும் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைசாதியினருக்கு 635 இடங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. ரா. மார்க்கபந்து : இங்கே விவரங்களைத் தருகிற போது தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் பின்தங்கின வகுப் பினருக்கும் விவரங்களைத் தனித் தனியாகச் சொல்லியிருக் கிறார்கள். மூலக் கேள்வி எந்தெந்தச் சமூகத்தினருக்கு எவ் வளவு இடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதாகும். தந்தை பெரியார் அவர்களுடைய வகுப்புவாரி பிரதிநிதித் துவத்தைச் செயல் படுத்தும் வகையில் மாணவர்களுக்கு சமூக வாரியாக இடங்களைத் தர செயற்குறிப்பு அரசாங்கத் தில் உண்டா? பெரியாரின் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையை அமல்படுத்த இந்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்த வகுப்புவாரி பிரதி நிதித்துவ அடிப்படையில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை 1949ஆம் வருஷத்தில் இருந்து நடைமுறையில் இல்லை. இப்போது பிற்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பி னர் என்ற அடிப்படையில்தான் செய்யப்பட்டு வருகிறது.

திரு. ரா. மார்க்கபந்து : அப்படி என்றால் பெரியார் அவர்களுடைய வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கையை விட்டுவிட அரசு ஆயத்தமாக இருக்கிறதா ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : தலைவர் அவர் களே, பெரியார் அவர்களுடைய கொள்கையை விட்டுவிட அரசு தயாராக இல்லை. 1949-க்குப் பிறகு சுப்ரீம்கோர்ட் அளவுக்குப் போய் செயல்படுத்த முடியாது என்ற நிலைமையில் தான் அது நடைமுறையில் இல்லை. இப்போது பிற்பட்ட

1978 பிப்ரவரி 25]

வகுப்பினருக்கு 31 சதவிகிதம், தாழ்த்தப்பட்ட வகுப்னருக்கு 18 சதவிகிதம் என்ற அந்த முறைதான் இருந்து வருகிறது.

(முற்பகல் 9-30)

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரியிலே பயிலக்கூடிய மாணவர்களுக்கு தமிழிலேயும் சொல்லிக்கொடுக்கப்படுகிறது, ஆங்கிலத்திலேயும் சொல்லிக் கொடுக்கப்படுகிறது, இரண்டும் இருக்கிறது. இதிலே அதிகமான ஆர்வமுள்ளவர்கள் எதிலே சேருகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. சௌந்திரராசன்: தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரியிலேயும், பொறியியல் கல்லூரியிலேயும் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் என்ற அடிப்படையில் இடங்கள் ஒதுக்கப்பட்டாலும் தமிழ்நாட்டிலே பல்வேறு பிற்படுத்தப்பட்ட வட்டங்கள் இருக்கின்றன, அந்தப் பகுதிகளிலே இருந்து வருகின்ற மாணவர்களுக்கு படிக்கின்ற வாய்ப்புக் கிடைக்காமல் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே பொருளாதார ரீதியிலே பின்தங்கியோர் பிற்படுத்தப்பட்ட பகுதிகளிலே இருந்து வருகிறபோது அவர்களுக்கு அதிகமாக வாய்ப்பு அளிக்கிற அடிப்படையில் கல்லூரிகளில் இடங்கள் அளிக்கும் முறையை அரசு பின்பற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பிற்பட்ட பகுதிகள் அல்லது கிராமப் பகுதிகளில் இருக்கின்ற மாணவர்களுக்கு இடங்கள் கிடைக்க வேண்டும் என்று தான் அரசு கருதுகிறது. அதை நிச்சயமாக இந்த அரசு செய்யும்

திரு. டி.பி.மு. பெரியசாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் பின்தங்கியவர்கள் பட்டியலில் உள்ளவர்களோடு மிகவும் பின்தங்கியவர்களின் பட்டியலில் உள்ளவர்களையும் சேர்த்துக் கொள்வதற்கு ஆலோசனை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதற்கு முன்னாலே இருந்த நடைமுறை தான் இப்போதும் பின்பற்றப்படுகிறது. அது சிறந்த முறையாக எங்களுக்குத் தெரிகிறது.

[1978 பிப்ரவரி 25

குடந்தை அரசினர் ஆடவர் கல்லூரி.

*வினு—270. திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குடந்தை அரசினர் ஆடவர் கல்லூரியில் முதுநிலை வகுப்புகளுக்கான கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவைகளின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) எந்தெந்த முதுநிலை வகுப்புகள் நடைபெறுகின்றன?

(ஈ) முதுநிலை வகுப்புகள் நடைபெருவிட்டால், அவற்றிற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) ஆம்.

(ஆ) அவைகளின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 9,40,000

(இ) குடந்தை அரசினர் ஆடவர் கலைக் கல்லூரியில் கீழ்க்காணும் முதுநிலை வகுப்புகள் நடைபெறுகின்றன.

எம். ஏ. பொருளாதாரம். தமிழ்.
எம்.எஸ்ஸி. கணிதம்.
தமிழில் எம்.பில். (M. Phill)
(பகுதி நேர வகுப்பு)

(ஈ) பத்தி இ-ல் உள்ள பதிலால் இக்கேள்வி எழவில்லை.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சௌத் இன்டியன் கேம்பிரிட்ஜ் என்று அழைக்கப்படும் இந்தக் கல்லூரியிலே எம்.எஸ்ஸி. பிஸிக்ஸ், எம்.எஸ்ஸி. கெமிஸ்ட்ரி ஆகிய முதுநிலை வகுப்புகளைத் துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தனிக் கேள்வி போட்டால் விடையளிக்கப்படும்.

[1978 பிப்ரவரி 25]

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, அங்கே எம்.எஸ்.ஸி. பிஸிக்ஸ், எம்.எஸ்ஸி. கெமிஸ்ட்ரி வகுப்புகள் நடத்துவதற்கான கட்டடங்கள் எல்லாம் கட்டப்பட்டு விட்டது, ஆனால், பாடம் நடத்தப்படாமல் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக் கேள்வி போட்டால் அதற்குரிய பதில் அளிக்கிறேன்.

பள்ளிகளில் ''கணக்கு'' பாடம்.

*வினா—271 திரு. து. புருஷோத்தமன்
திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பள்ளிகளில் இப்பொழுது நடைமுறையில் உள்ள புதிய கணக்கு முறையை நீக்கி விட்டுப் பழைய முறையையே வைத்துக் கொள்ளும்படி மத்திய கல்வி அமைச்சகம் மாநில அரசுக்கு யோசனை தெரிவித்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை. எனினும் தற்பொழுது தமிழ் நாட்டுப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டுள்ள புதிய பாடத்தில் கணக்குப் பாடத்திலும் சரி, வேறு பாடங்களிலும் சரி, மாற்றங்கள் தேவையா என்பது குறித்துப் பாடத் திட்ட வல்லுநர் குழுக்களுடன் கலந்து ஆய்வு செய்யப்பட்டது. அக்குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் 1978—79 முதல் பல்வேறு வகுப்புகளிலும் (கணக்கு உட்பட) பல்வேறு பாடங்களின் சுமையைத் தக்க அளவுக்குக் குறைத்திட அரசு முடிவு செய்துள்ளது. கணக்கைப் பொறுத்தவரை 1—5 வகுப்புகளில் 1978—79 முதல் ''புதுக் கணக்கு'' முறை நீக்கப்படும். அவ்வாண்டு முதல் 6—10 வகுப்புகளிலும் ''புதுக்கணக்கு'' முறையின் கடுமை குறைக்கப்படும்.

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, மாநில அரசின் அதிகாரத்திற்குட்பட்ட கல்வித் துறையிலே மத்திய அரசு தலையிடுவது குறித்து இந்த அரசு என்ன கருத்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய பேரறிஞர் அண்ணா